
# சிரித்திரன்

கார்த்திகை, மார்கழி விலை: ரூபா: 15

1992




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர்:- மாமியார் போசனத்தில் மாப்பிளை
சௌக்கியமாகத்தான் இருக்கிறார்.

மாமியார்:- நான் அவருக்கு வானதி அரிசி
ஆலையில குத்தின அரிசிச் சோறு
தான் குடுக்கிறனான்.

# வானதி

## அரிசி ஆலை

சாமியன் அரசடி — நெல்லியடி.

உரிமையாளர்: திருமதி. த. கெங்காதேவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகரசபை
24-12-19..

# சிரித்திரன்

செய்தொழில் தெய்வம் சிரிப்பே சிறையம்

நகை 31 கார்த்திகை - மார்கழி சுவை 5

## முன் முறுவல்

ஒருத்தி:- உன்ர மாமி எப்பிடி?

மற்றவள்:- பிரித்தானியற்றை சாணக்கியம் பிரித் தாளும் யாப்பு-என்ர மாமியின்ர சாணக்கியம் பிரித்தாளும் ஆப்பு.

---

பெரியவர்:- ஏன் தம்பி! வாழப்பழத்தோலை தார் றோட்டில போடுறாய்?

பையன்:- நான் என்ன மிருகமே? வாழைப் பழத்தோலைச் சாப்பிடுறதுக்கு?

பெரியவர்:- நீ மிருகமெண்ட படியால தான் குப்பைத் தொட்டி இருக்கிறது தெரி யேல்ல!

---

மணியம்:- சின்னக்குட்டியண்ணை!, கிணத்துக் குள்ளை விழுந்துபோனியளாம்.

சின்னக்குட்டி அண்ணர்:- ஓம் தம்பி... நீந்தத் தெரிஞ் சபடியால் தப்பியிட்டன்.

மணியம்:- மாரித்தண்ணி குளிரயில்லையோ?

சின்னக்குட்டி அண்ணர்:- குளிர்ந்துது .. ஆனா ஒருசுறுட்டு இல்லாமப் போச்சுது பத்த......

---

பொன்னர்:- பொருளாதாரத் தடை தமிழன்ர பரிணாம வளர்ச்சியில என்ன மாற் றத்தைக் கொண்டு வரும்?

சுப்பர்:- இனிமேல் பிறக்கிற பிள்ளைகள் கங் காரு போல ஒ பயோட பிறந்தாலும் ஆச்சரியப்படுறதுக்கில்ல.

---

பெண்மணி:- டொக்டர்... என்ர மனுசனுக்கு ஞாபக மறதி...

டொக்டர்:- ஏன் என்ன செய்யிறார்?

பெண்மணி:- மின்சாரமில்ல எண்டு தெரிஞ் சும் மறதியில பொத்தானை அழுத்துறார்,

---

ஒருவர்:- டாக்டர் பொம்பர் வருகுது ... குண்டு போட

டாக்டர்:- ரெண்டு தலைவலி மாத்திரை போட் டிட்டு படு, சுகமாப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்ணில் பறக்கும் புகைக் கூண்டுகள்

தமிழ் ஈழத்தின் கரையோரப் பட்டண நகரமாகிய வல்வெட்டித்துறையில் ஆலயத் திரு விழா உற்சவ காலங்களில் விண் நோக்கி புகைக் கூண்டுகளை அனுப்பும் வழமை நீண்ட காலமாகவே பின்பற்றப்பட்டு வருகின்றது. தென் கிழக்கு ஆசிய நாடுகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த நிகழ்வு தமிழ் ஈழத்தில் ஆரம்பமானதே ஒரு தற்செயல் நிகழ்ச்சி ஆகும். தென் கிழக்காசிய பிராந்தியத்தில் உள்ள பல நாடுகளுக்கும் தமிழ் ஈழத்தின் வல்வெட்டித்துறைக்கும் இடையில் கடல் மார்க்கமான வர்த்தகப் பரிமாற்றம் நீண்ட காலமாகவே நிலவி வருகின்றது. குறிப்பாக முதலாவது உலக மகாயுத்தத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளின் போது பர்மாவில் இருந்து பாய்மரக் கப்பல்களில் அரிசி ஏற்றிக் கொண்டு வரப்பட்டு அவை வல்வெட்டித்துறையில் இறக்குமதி செய்யப்பட்டு, யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களுக்குப் பங்கிட்டு அளிக்கப்பட்டது. இந்தப் பணியில் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த வர்த்தகர்கள் பெரும் பங்களிப்பைச் செய்தார்கள். அக் கால கட்டத்தில் அவர்கள் பலரிடம்தான் சொந்தமாகப் பாய்மரக் கப்பல்கள் இருந்தன.

இவ்வாறாக 1928 ஆம் ஆண்டு பர்மாவில் இருந்து அரிசி ஏற்றிக் கொண்டு "விநாயக சௌபாக்கிய லட்சுமி" என்ற கப்பல் வல்வெட்டித்துறையை நோக்கி வங்காள விரிகுடா கடல் பகுதியில் வந்து கொண்டு இருந்த பொழுது அக் கப்பலுக்கு மேலாக மிகத் தாழ்வாக புகைக்கூண்டு ஒன்று குறுக்காக வந்து கொண்டு இருந்தது. கப்பலில் இருந்த மாலுமிகள் கைக் கெட்டிய தூரத்தில் வைத்து அதனைக் கைப் பற்றிக் கொண்டனர்.

அது பர்மிய மக்களால் அவர்களது கலாச்சார விழா ஒன்றின் பொழுது கடலுக்கு மேலாக விண் நோக்கி அனுப்பப்பட்ட ஒரு புகைக் கூண்டு ஆகும். அவர்களது ஆழ்புல நீர்ப் பரப்புக்கு அப்பால் வானில் பறந்து செல்லும் அந்த புகைக் கூண்டைப் போல புகைக் கூண்டுகளைத் தயார் செய்து விண்ணில் அனுப்ப வேண்டும் என்ற ஆர்வம் அக் கப்பலில் இருந்த மாலுமிகளுக்கு ஏற்பட்டது. அவர்கள் வல்வெட்டித்துறை நெடியகாட்டைச் சேர்ந்தவர்கள் ஆகும். அவர்கள் தம்மால் கைப்பற்றப்பட்ட பர்மிய புகைக் கூண்டின் அமைப்பையும் காற்று அடைக்கப்பட்ட நிலையில் அது விண்ணில் பறக்க வைக்கப்படும் தொழில் நுட்பத்தையும் ஆராய்ந்து தமது பட்டறிவுக்கு எட்டிய வகையில் புதிய புகைக் கூண்டுகளைத் தயார்படுத்தலாயினர்.

இவ்வாறாகத் தயார் செய்யப்பட்ட புகைக் கூண்டுகளை வல்வெட்டித்துறை மக்கள் கோயில் உற்சவங்களில் பரீட்சார்த்தமாக விண் நோக்கி அனுப்பத் தொடங்கினர். காலகெதியில் அவர்களது இந்தத் தயாரிப்புக்கள் வெற்றி பெறவே வடமேல் பருவப் பெயர்ச்சிக் காற்று கடலை நோக்கி வீசுகின்ற பொழுது - இதனை மேற்காவுகை ஓட்டம் என அழைப்பர் - மக்கள் குடியிருப்புக்களில் வீழாதபடி கடலுக்கு மேலான விண் வெளிப் பரப்பினை நோக்கி அவை பறந்து செல்லக் கூடிய வகையில் அவற்றைப் பறக்க விட்டனர்.

கார்த்திகை மாத கார்கால மேகக் கூட்டங்களுக்கு மத்தியில் இரவு வேளைகளில் ஒளிவிடும் இந்தப் புகைக் கூண்டுகள் விண்ணில் மின்னும் தாரகைகள் போல் காட்சி அளிப்பதே கண் கொள்ளா நிகழ்வாக இருக்கும்.

பவன அமுக்கம் இப் புகைக் கூண்டுகள் விண்ணில் வலம் வர பெரிதும் உதவுகின்றன. கோயில் திருவிழா உற்சவகாலம் புகைக் கூண்டுகளை விண்ணுக்கு அனுப்பும் பருவகாலமாகவும் அமைகிறது. இப்போதெல்லாம் வல்வெட்டித்துறையில் சமய வைபவங்களில் மட்டுமன்றி இந்த மண்ணின் விடிவிற்காக மரணித்த மாவீரர்களின் நினைவஞ்சலி வைபவங்களிலும் புகைக் கூண்டுகளை விண்ணில் பறக்க விடும் நிகழ்வு ஒரு மரபாகப் பின்பற்றப்பட்டு வருகிறது. 1990 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 5ம் நாள் தீருவில் மைதானத்தில் இடம்பெற்ற 12 வேங்கைகளின் நினைவு தின வைபவத்தில் 12 புகைக் கூண்டுகள் பல்லாயிரக்கணக்கான மக்கள் முன் நிலையில் வைத்து விண்நோக்கி அனுப்பப்பட்டன. அவை விண்ணில் பறந்த பொழுது மெல்லிய சிவப்பு, மஞ்சள் கடதாசித் துகள்களை மக்கள் மீது தூவிச் சென்றன. அவை மலர் அஞ்சலி போன்ற உணர்வை ஏற்படுத்தின.

தகவல் சுவர்ணகேசரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுமின்!

சித்தார்த்தர், வைகாசி பௌர்ணமியன்று ஞானோதயம் பெற்ற நாளே விசாகப்பெருநாள். அரவணைத்த மனைவியையும், அன்புக்குழந்தையையும், அரசியலையும் துறந்து போதிமரத்தின் கீழ் பெற்ற பெரும் பேறே பௌத்தமதம். இந்த விசாகத் தினத்தில் கொழும்பு மாநகரம் சித்திரலோகமாக மாறி மின்னொளி வெள்ளத்தில் மிதக்கும். மக்கள் அலை கரைபுரண்டு, பந்தல்கள் போதிக்கும் பௌத்த தர்மத்தில் திளைத்து வீடு ஏகுவார்கள்.

இன்று நம்மண்ணில் தமிழீழ விடுதலைப் போராளிகள் தம் உரிமைக்காக ஓர் புனிதப்போர் நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். தவமிருந்து பெற்ற தாய் தந்தையரை மறந்து, உடன்பிறந்த சகோதரங்களை, உற்றார் உறவினரை மறந்து, கல்வி, சுகவாழ்வு எல்லாவற்றையும் துறந்து, போர்க்களம் புகுந்திருக்கிறார்கள் எமது அடிமை விலங்கை ஒடிப்பதற்கு.

வீணைக்கொடி வேந்தன் மண் என்றும் வீணாகானபுரம் என்றும் அழைக்கப்படும் எங்கள் மண்ணில் நாம் அடிமை விலங்குடன் எப்படி தேசிய கீதம் இசைப்பது?

எமது விடுதலைப்போர் வீரர்கள் மரணிக்கும் தெய்வங்கள். அவர்கள் தியாக தீபமாக ஒளிர்கிறார்கள். அவர்கள் துயில் கொள்ளும் இடம் புனித ஸ்தலமாக மதிக்கப்படவேண்டும்.

மாவீரர் எழுச்சி வாரம் தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக கொண்டாடப்பட்டது. ஓவியர்களும், மின்னொளி ஊழியர்களும் மக்கள் மனதைக் கவரும் வகையில் வீதிதோறும் தம் கைவண்ணத்தைக் காட்டும் வகையில் பந்தல்கள் நிறுவியிருந்தார்கள்.

## நிலைக்கண்ணாடி

தமிழ் ஈழம் வரலாறு காணாத மக்கள் வெள்ளத்தை மாவீரர் வாரத்தில் கண்டு எழுச்சியுற்றது - எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல் இறுதி நாளன்று இரவு பன்னிரண்டு மணிக்கு மக்கள் துயில் கொள்ளாமல் விழித்திருந்து, தங்கள் வீட்டு வாயிலில் விளக்கேற்றி எழுந்து நின்று எமது தியாக சீலர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

தமிழரின் பண்டிகைகள், விழாக்கள், சடங்குகள் அனைத்துமே பொதுவாக யாரோ ஒருவருக்கு நன்றியைத் தெரிவிக்கும் அம்சமாகவே யுள்ளன. அந்தவகையில் மாவீரர் வாரமும் தமிழர்களின் வரலாற்றில் புதிய பண்பாட்டம்சமாக மாறிவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மகுடி

## கேள்வி - பதில்கள்

**எஸ். கணேஸ்வரன் —கெருடாவில் தொண்டமானாறு**

★ சந்தியில் நின்றுகொண்டு "இன்றைக்கு பத்திரிகையில் என்ன செய்தி?" என்று கேட்பவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

☆ பந்தியில் இருந்துகொண்டு கறிக்கு உப்புப் புளி பார்க்கும் உத்தமர்கள்.

**சி. பேரின்பன் —1005, மானிப்பாய் வீதி, வண்ணார்பண்ணை**

⚜ இன்றைய யுத்த சூழ்நிலையில் போராட்டத்துடன் இணைந்து நிற்பவர்கள்போல் பாசாங்கு செய்பவர்களைப் பற்றி உமது கருத்து என்ன?

☆ ஜாக்கிரதை! இரட்டை நாக்குப் பாம்பு.

**சிவரஞ்சன் —யாழ்ப்பாணம்**

⚜ பண்பு பற்றி விளக்குக?

☆ வாசிக்கத் தெரிந்தவன் படிப்பாளனல்ல. படித்தவன் எல்லாம் பண்பாளனல்ல.

**சி.ராணி —புத்தூர்**

⚜ அன்பிற்கு உலகம் வழங்கிய பரிசு என்ன?

☆ யேசுநாதர் சிலுவையில் அறையப்பட்டார். சோக்கிரட்டீஸ் நஞ்சூட்டப்பட்டார், ஆபிரஹாம் லிங்கன் சுடப்பட்டார்.

**அ.பரந்தாமன் —புதுக்குடியிருப்பு**

⚜ மன்னிக்கும் மனப்பான்மையில்லா மனிதன்...

☆ மானுடம் இல்லா ஜடம்.

**சி.துரை — ஆனைக்கோட்டை**

⚜ எவன் குரு?

☆ உன்னை உனக்கு அறிமுகப்படுத்துபவன்.

**க.வனஜா — நல்லூர்**

⚜ மைத்துனிகள் சண்டை எப்படிப்பட்டது?

☆ மகாபாரதப் போர் 18 நாளைக்கு; மைத்துனிமார் சண்டை மாதக் கணக்கில்.

**சி.ராகுலன் — கொக்குவில்**

⚜ யாழ்ப்பாண செல்லாச்சி, மனோன்மணி எல்லாம் எங்கே?

☆ செல்லாச்சி 'ஷெல்'லிற்குப் பயந்து சுவிசுக்குப் போட்டா, மனோன்மணி மண்பற்றினால் துப்பாக்கி தூக்கிவிட்டாள்.

**எஸ். கணேஸ்வரன்—தொண்டமானாறு**

⚜ கலை இலக்கியம் படைப்போர் பற்றி உங்கள் கருத்தென்ன?

☆ எல்லாக் கலைகளும் வாழ்க்கையுடன் இனிது இணைவதற்கே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க. மயில்வாகனம் —கரவெட்டி

⚜ பயம் எப்படிப்பட்டது?

☆ வயிற்று உறுமல்கூட துப்பாக்கி உறுமல் போல தென்படும்.

சி. பரமேஸ்வரன் — வதிரி

⚜ கவலையில் வெந்து கொண்டிருக்கிறேன். ஆறுதல் கூறும்?

☆ பொன்னைப் புடம் போடுவது ஒழிக்கவல்ல; ஒளிர்வதற்கு.

ரி. கே. குமார் —குப்பிளான்

⚜ நிலையில்லா மனிதன் செல்வம் சேர்ப்பதை இலட்சியமாகக் கொள்வது ஏன்?

☆ பாசக்கயிற்றைத் தங்கக் கத்திரிகையினால் துண்டிக்கலாம் என்ற எண்ணம் போலும்.

ரா. சுகந்தன் —உடுப்பிட்டி

⚜ மாரி காலம் விவசாயியின் மனோ நிலை...?

☆ வானம் வடிக்கும் ஜீவாமிர்தம் கடலுள் வடியுதே என்ற கவலை.

சி. நிரோசன் —விக்னேஸ்வரா வீதி, கரவெட்டி

⚜ இன்று ஒருவனுக்கு கல்வியா? செல்வமா? வீரமா? தேவை-

☆ வீரம் இருந்தால் நூல்நிலையத்தையும் நிதி நிலையத்தையும் காடையர்களிடமிருந்து காப்பாற்றலாமல்லவா.

க. சீவரத்தினம் —நல்லூர்

⚜ இந்தக்காலம் என்ன உண்டு? என்ன இல்லை?

☆ பருத்தியடைப்பு உண்டு; பருத்தி ஆடை இல்லை.

சி. கருணை —சுன்னாகம்

⚜ வாழ்க்கை தோல்வியில் முடிவதேன்?

☆ கவலையும் பயமும் வாழ்க்கையைச் சிதைக்கும்; சிதையிலும் வைக்கும்.

சி. ரதினி —மீசாலை

⚜ சிறீமாவோபற்றி உமது கருத்து?

☆ அனுராகம்.

க. கண்ணன் —தும்பளை

⚜ அந்தக்காலம் எது? இந்தக்காலம் எது?

☆ சகடை வீதி சுற்றியது அந்தக்காலம்; சகடை வானைச் சுற்றுவது இந்தக்காலம்.

திருநீபன் —கரவெட்டி

⚜ குரக்கன், சாமியை உணவாக உட்கொள்ள பின் வாங்குவது ஏன்?

☆ கேக் சாப்பிடும் MRS: தாமோதிரன் கூட்டம் ''வட் இஸ் குரக்கன்; வட் இஸ் சாமி'' என்று கேட்கிறார்கள்.

வினோகாந்தன் —புலோலிதெற்கு

⚜ யாழ்ப்பாணம் எதில் உலகிலேயே முதலிடம் பெறுகிறது?

☆ தமிழ் இளைஞர்களின் வீரம். வானத்தைத் தொட்டு விட்டது.

முதலாவது கேள்வி பரிசுக்குரிய கேள்வியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறது. இதற்கான பரிசு ரூபா ஐம்பதினை மில்க்வைற் அதிபர் கலாநிதி க. கனகராசா அவர்கள் வழங்குவார்.

மகுடியாரிடம் கேள்விகள் கேட்கவிரும்புவோர் அவற்றை அனுப்ப வேண்டிய முகவரி,

"மகுடி"
சிரித்திரன்
இல. 550, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாறும் காலமும் மாறாத நினைவுகளும்

ஈழநாதம் பத்திரிகை அலுவலக வாசலில் நின்றுகொண்டிருந்தேன். அங்கு இரு பல்கலைக் கழக மாணவர்கள் வந்தனர். என்னைக் கண்டதும் நேராக என்னிடம் வந்து, ''ராத்திரி கிளாலியில போ(B)ட் அடிபட்டதா ஏதும் நியூஸ் வந்ததோ?'' என்று கேட்டனர். நான், ''இல்லை'' என்றேன். ''ஜவ்னா யூனிவசிற்றி ஆக்கள் ரெண்டு போ (B)ட்டில போனவை. ஆமி அடிச்சதாம். ஒரு போ(B)ட் வந்திட்டுது; மற்றதக் காணயில்ல. அதுதான், உங்களிட்டக் கேட்டா ஏதும் விபரம் தெரியுமெண்டுதான் வந்தனாங்கள்...... ஏன், உங்களுக்குச் செற் நியூஸ் வரேல்லயோ?......'' என்று கேட்டனர்.

நான் நின்ற இடம் தினசரிப் பத்திரிகையின் அலுவலகம் என்றபடியால் அப்பகுதியின் (கிளாலியின்) செய்தியாளர் ஏதாவது செய்தி அனுப்பியிருப்பார் என்ற வகையில் இவர்கள் இப்படிக் கேள்வி கேட்பது இயல்பானதே. ஆனால்,''உங்களுக்குச்செற்நியூஸ்வரேல்லயோ?'' என்று கேட்கிறார்களே! ஆம்...எமது தொலைத் தொடர்பு வசதியினைப் பற்றி பொதுமக்கள் மிக நன்றாகவே அறிந்துள்ளனர். அதில் நாம் முன்னேற்றமடைந்துள்ளோம்தான். போராட்ட வளர்ச்சியுடன் இணைந்ததாக எமது தொலைத் தொடர்பும் வளர்ந்துள்ளது. 1988 ஆம் ஆண்டு (இந்தியப் படையுடன் போர் நடந்துகொண்டிருந்த போது) எமது தொலைத் தொடர்பு ஆற்றலைப்பற்றி இந்தியத் தினசரி 'தினமணி' யின் இணைப்பான 'தினமணி கதி' ரில் படித்த செய்தியும் நினைவுக்கு வந்தது.

இன்று இப்படி நிலைமை உள்ளது. அன்று எப்படியிருந்தோம்?... 1982 ஆம் ஆண்டுக் காலத்தில் நிகழ்ந்த அந்தச் சம்பவங்கள் நினைவுக்கு வந்தன. அன்று 'வாக்கி டோக்கி' இருந்திருந்தால்... பளை-மாசார் பகுதியில் இராணுவ 'ஜீப்' மீதான தாக்குதல் வெற்றிகரமாக நிகழ்ந்திருக்கும், என்றெல்லாம் நினைத்துக்கொண்டு, அப் பகுதியில் நாங்கள் ஒரு தாக்குதலுக்காகக் காத்திருந்த அனுபவங்களை எப்போதாவது எழுத வேண்டும் என்று நினைத்துக்கொண்டேன், ஆனால், நேரம் கிடைக்கவில்லை. இன்று அதிகாலை (28.10.1992) ஈழநாதம் படித்தேன். அதில் வெளியாகியிருந்த செய்தி அன்றைய காலகட்டத்தை மீண்டும் நினைவுகூரவேண்டிய அவசியத்தை விரைவுபடுத்தியது...... தொலைத் தொடர்பு விடயத்தில் அன்று நாம் எப்படியிருந்தோம்? அன்று சந்தோசம் எப்படி நடந்து கொண்டான்?

## கரும்பறவை

* * *

ஆனையிறவு முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் 'ஜீப்' பில் வரும்போது தாக்குதல் தொடுக்க வேண்டும். இதற்குச் சரியான வாய்ப்பு எது என்று ஆராய்ந்துகொண்டு இருந்தோம். வாரத்தில் மூன்று அல்லது நான்கு நாட்கள் ஆனையிறவிலிருந்து தாழையடிக்கு மீன் வாங்க வருவார்கள் சிறீலங்கா இராணுவத்தினர். மாசாரில் குடிமனைகள் உள்ள இடத்திற்கப்பால் இவர்கள் மீது தாக்குதல் நடத்த வாய்ப்புண்டு. மாசாரில் மானா வீட்டில் தொடர்ச்சியாகப் பலநாட்கள் தங்கியிருந்தபோது இதனை நான் அவதானித்தேன். (மானா 05.08.1984 அன்று நிகழ்ந்த ஒட்டிசுட்டான் காவல் நிலையத் தாக்குதலின்போது காயமடைந்தவர் இந்தியாவில் சிகிச்சை பெற்றபின் அங்கு தங்கியிருந்த காலத்தில் சுகவீனம் காரணமாக வீரச்சாவெய்தியவர்) இதனை ஏனையோரும் வந்து பார்த்துத் திருப்தி தெரிவித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கிடையில் கொம்படிப் பாதையில் உள்ள ''மான்பாய்ச்சான் வாய்க்கால்'' என்ற பகுதியில் இராணுவத்தினர் தங்கியிருந்து துப்பாக்கிச் சூட்டுப் பயிற்சி நடத்துகின்றார்கள் என்ற செய்தி கிடைத்தது. அங்கும் சென்று பார்த்தோம் அதுவும் திருப்திகரமாக இருந்தது. ஆனையிறவிலிருந்து மான்பாய்ச்சான் வாய்க்காலுக்குச் சிறீலங்கா இராணுவத்தினர் போக்குவரத்துச் செய்யும் சந்தர்ப்பத்திலும் தாக்குதல் நடத்துவதற்கான வாய்ப்புண்டு. இரண்டு இடங்களையும் மாத்தயா, ராமு இருவரும் பார்த்துத் திருப்தி தெரிவித்தனர். எமது ஏற்பாடுகள் பூர்த்தியாகும் நேரம் மான்பாய்ச்சான் பகுதியில் துப்பாக்கிப் பயிற்சியை முடித்து தமது தற்காலிக முகாமையும் மூடிவிட்டு ஆனையிறவுக்குத் திரும்பிவிட்டனர் இராணுவத்தினர்.

அதனாலென்ன? தாழையடிக்குச் செல்லும் சிறீலங்கா இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தலாமே? பைப்புகளில் டைனமைற்றை வைத்து, அதற்குத் திரி வைத்து...... இதை வெடிக்க வைப்பதற்கு மின்சாரம் வேண்டுமே!... அதற்கு ஒரு ஜெனரேட்டர் வாங்கி......சாப்பாடு?......பிஸ்கட்டும் சீஸ் ரின்களும்...... எல்லாம் சரி, புறப்பட்டாயிற்று. கொக்குவில் கிழக்கிலிருந்து எமது வா(V)ன் புறப்பட்டது. சங்கர் தான் சாரதி. சீலன், மாத்தயா, சங்கர், ரகு, அப்பையா அண்ணை, அருணா, ராமு, சந்தோசம், நான் ஆகிய ஒன்பதுபேரும்தான் இத் தாக்குதலுக்காகப் புறப்பட்டவர்கள். ஆட்களின் நிறைக்குச் சமமாக அப்பையா அண்ணையின் பொருட்களுமிருந்தன.

மாசாரில் மானா வீட்டுக்குத் தள்ளிச் சிறிய பற்றைக்காடுகள் உள்ளன. அதில் தங்கியிருக்கலாம் தாழையடி வீதியில் மானா வீட்டிற்கும் கோவிலுக்கும் இடையிலுள்ள ஒரு வளைவில் வெடிமருந்துக் குழாய்களைப் புதைத்து 'ஜீப்' வரும்போது நிலக்கண்ணியை வெடிக்க வைத்து தாக்குதலும் நடத்துவது என்று தீர்மானித்தோம். அப்பையா அண்ணைதான் ஆளியை அழுத்துவதற்குத் தெரிவுசெய்யப்பட்டார். சீலன் இத் தாக்குதலுக்குத் தலைமை தாங்கினான்.

வா(V)னை அந்தச் சிறிய பற்றைக் காடுகளுக்குள் விட்டோம். வானிலிருந்து இறங்கித் துரிதமாகத்தான் இயங்கினோம். ஆனாலும், எமது ஏற்பாடுகள் பூர்த்தியாவதற்குள் விடிந்துவிட்டது. இனி மிகுதி வேலைகள் பார்க்கமுடியாது. காலையில் இராணுவ 'ஜீப்' தாழையடிக்குச் சென்றுவிட்டது. அதைப் பார்க்க ஒரு நம்பிக்கை பிறந்தது — எத்தனை நாள் சென்றாலும் தாக்குதல் நடத்தலாமென்று. அன்றைய வேலை அத்துடன் முடிந்தது.

அடுத்த நாள் இரவு முழு வேலைகளும் பூர்த்தியாயிற்று. பைப்புகளைவளைவில்புதைத்து, வயர் போகும் பாதைகளை உருமறைப்புச் செய்து - எல்லாம் முடிந்தது. மூன்று தினங்கள் இப்படியே காத்திருந்தோம். ஆனால் இராணுவத்தினர் வரவில்லை, தொடர்ச்சியாக மரக்கறி சாப்பிட ஆசைப்பட்டுவிட்டார்கள் போலிருக்கிறது.

நாம் எதிர்பார்த்த தினத்தில் தாக்குதலில் பங்குபற்றியதும் பல்கலைக்கழகத்துக்குச் சென்று பரீட்சை எழுதலாம் எனத் தீர்மானித்திருந்தான் சந்தோசம். பரீட்சைக்கான திகதி வந்துவிட்டது. இராணுவத்தினரையும் காணவில்லை; எத்தனை நாள் ஆகுமோ தெரியாது. இந்நிலையில் சீலன், மாத்தயா இருவரும் சந்தோசத்தைப் பரீட்சை எழுதப் போகுமாறு கூறினார்கள். ஆனால், சந்தோசம் மறுத்துவிட்டான். இத்தனை நாள் காத்திருந்து கிடைத்த சந்தர்ப்பம் இது — இதை இழக்கத் தயாரில்லை அவன்.

கல்வியையும் சமூக அந்தஸ்தையும் பெரிதாக — ஏன்? அதையே வாழ்வாகக் கருதும் யாழ்ப்பாணச் சமூகத்திலிருந்துதான் இவனும் தோன்றி இருக்கிறான்.

தரப்படுத்தல் போன்ற தடைகளையெல்லாம் தாண்டிப் பல்கலைக்கழகத்துக்குச் சென்றவன் அவன். அந்த மஞ்சள் உடை போட்டு கையிற் பட்டத்துடன் கல்யாணச் சந்தையில் விலை மதிப்பு மிக்க காளையாக இருப்பதை விட, இங்கே இராணுவத்தை எதிர்பார்த்துக் காத்துக் கிடப்பதில் திருப்திகண்டான் அவன், ''ரெஸ்ற் ஒரு வருசம் பிந்தியும் எடுக்கலாம்'' — என்று தீர்மானமாகக் கூறிவிட்டான்.


அடுத்த இதழில்......

து.வைத்திலிங்கம்
எழுதிய

**''மரத்தடி மகாராஜாக்கள்''**

சிறுகதை வெளிவரும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு நாளில் சீஸ் ரின்னும் பிஸ்கட்டும் முடிவடைந்துவிட்டன. சாப்பாடு எடுத்தால்தான் நிலைமையைச் சமாளிக்கலாம். பக்கத்தில் மானா வீடு, ஓரிருவருக்கென்றால் பரவாயில்லை. இத்தனை பேருக்கும் சேர்த்து சமைக்கக்கூடிய பாத்திரங்கள் அவர்களிடம் இல்லை. நான் அங்கே தங்கியிருந்த காலத்தில் அந்தக் குடும்பத்தின் வறுமையை உணர்ந்தவன். தங்கள் இயலாமை எனக்குத் தெரியாமலிருப்பதற்காக மிகவும் சிரமமெடுத்துக்கொண்டார்கள் அவர்கள். கஷ்டப்பட்டு எப்படியும் எனக்குச் சாப்பாடு தந்துவிடுவார்கள். நான் அங்கிருந்து சென்ற பின்னர் வேறு சிலர் அங்கு தங்கியிருக்கிறார்கள். அவர்களையும் அக்குடும்பத்தினர் நன்றாக உபசரித்துள்ளார்கள். ஆகவே அங்கே எல்லோருமாகச் சாப்பாட்டுக்குச் செல்ல மனமில்லை. அதனால் கடையிலேயே சாப்பாடு எடுக்க முடிவு செய்தோம். அதன்படி என்னைத்தான் சாப்பாடு எடுக்க அனுப்பினார்கள். வாகனம் எதுவுமில்லை. நாம் தங்கியிருக்கும் இடத்திலிருந்து இரண்டு மைல் தூரம் நடந்து சென்று புதுக்காட்டுச் சந்தியை அடைந்து, அங்கிருந்து பேருந்து மூலம் பளைக்குச் செல்ல வேண்டும். அங்குதான் சாப்பாட்டுக் கடைகள் உள்ளன.

ஒரே கடையில் ஒன்பது பேருக்குச் சாப்பாடு கட்டினால், நீங்கள் யார்? எங்கே வேலை செய்கிறீர்கள்? என்பது போன்ற கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டியேற்படும். அதனால் இரண்டு, மூன்று கடைகளில் சாப்பாடு கட்டிக்கொண்டேன். மீண்டும் புதுக்காட்டுச் சந்திக்கு வந்து, அங்கிருந்து சாப்பாட்டைத் தூக்கிக்கொண்டு நடை. இதைக்கண்ட மானா குடும்பத்தினர் இரவில் எமக்குச் சாப்பாடு தந்தனர். தரவேண்டாம் என்று நாங்கள் கூறியதையும் நிராகரித்துவிட்டார்கள், அவர்களது சக்திக்கு அப்பாற்பட்டுத்தான் அதனைச் செய்தார்கள்.

அந்தச் சாப்பாட்டின் ஒவ்வொரு பிடியும் பெறுமதியுடையது.

குளிக்காமல் இருப்பது சங்கடமாக இருந்தது. பகலில் 'சென்றி' போட்டு நித்திரை செய்வோம். ஒருநாள் பகல் நான் நித்திரையாக இருக்கும்போது ராமு எழுப்பினார். ''பசீர்...... எழும்பு...... எழும்பு...... சந்தோசத் தின்ர தம்பி வந்திருக்குது''.

இவர் சொல்வதுபோல இல்லைத்தான். ஆனாலும் என்ன புதினம் என்று பாப்போம் என்று அங்கே போனேன். ஒரு பனை வடலிக்குப் பக்கத்தில் வெங்கிணாந்திப் பாம்பு ஒன்று சுருண்டு கிடந்தது. அதன் உஷ்...... உஷ்...... என்ற மூச்சு எனக்குக் கிலியையூட்டியது.

அந்த வெங்கிணாந்திக்கு அருகிற்தான் சந்தோசம் நித்திரை செய்திருக்கிறான். பாம்பின் மூச்சு ஆளை எழுப்பியிருக்கிறது. சந்தோசம் எழும்பி மற்றவர்களுக்குக் காட்டியிருக்கிறான். ராமு என்னைக் கூட்டிக்கொண்டு போய் ''அண்ணையைத் தேடி வந்திருக்குது பார்'' என்றார். எனக்கு விழி பிதுங்கியது. சந்தோசம் சிரித்துக்கொண்டு நின்றான்.

சந்தோசம் கலைத்தும் அது போகவில்லை. இனிக் கொல்வதைத் தவிர வேறு வழியில்லை. சந்தோசமும் அருணாவும் ஒரு கைக்கோடாரியினால் அதை வெட்டப் புறப்பட்டனர். அருணாவின் வெட்டுக்குப் பாம்பு துண்டாகவில்லை. பாம்பின் உடலில் பட்டதும் கைக்கோடாரி




**குதிரை:** கனவான் அப்பியாசம் எடுக்கும் கதிரை.

**யுத்தம்:** காலனின் திருவிழா.

**உறி:** பூனையின் ஊஞ்சல்.

**சுவர்க்கடிகாரம்:** எமக்கு வயது ஏறுவதை அடித்துக் கூறும் மணி நண்பன்.

**தொட்டில்:** வருங்காலம் மோட்டார் சைக்கிள் உதைத்து இயக்குவதற்குப் பயிற்சி எடுக்கும் அரங்கு.

**பொன் ஆசை:** பெண்களை வருத்தும் ஒருவகை மஞ்சள் காமாலை நோய்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் துள்ளித் துள்ளி மேலெழும்பியது. அதன் காயத்திலிருந்து வெளிவந்த இரத்தத்தின் மணம்......'அப்பப்பா!...... வாழ்க்கையில் அந்த மணத்தை இனி அனுபவிக்கவே வேண்டாம். அருணா வெட்ட வெட்ட அதன் மூச்சு அதிகரித்தது. அது எனக்கு இன்னும் திகிலை மூட்டியது. ஏற்கனவே நின்ற இடத்திலிருந்து பத்து அடி பின்னுக்குப் போய்விட்டேன். இரத்தத்தின் நெடி தாங்காமல் "சவம்!...... சவம்!......" என்று அருவருத்தபடியே வெட்டிக் கொண்டிருந்தான் அருணா. அது இப்போதைக்குச் சாவதில்லை என்று முடிவெடுத்துவிட்டதுபோல இருக்கிறது. என்ன செய்யலாம்?...... இறுதியாக, சுட்டுவிடுவது என்று முடிவெடுத்தார் மாத்தயா. சூட்டுச் சத்தம் கிராமத்துக்கும் பெரிதாகக் கேட்கக் கூடாது. அதனால், 38 ரகக் கைத் துப்பாக்கியினால் வெங்கிணாந்தி சுடப்பட்டது. பென்னம் பெரிய கிடங்கு தோண்டி அதைப் புதைத்துவிட்டோம்.

அதுவரைக்கும் கண்டகண்ட இடம் எல்லாம் படுத்த எங்கள் சுதந்திரம் வெங்கிணாந்திப் பாம்பைக் கண்டதும் பறிபோனது. என்னில் ஊர்ந்த எறும்புகள்கூட பாம்பினளவுக்குப் பயத்தை ஊட்டின. பனை வடலியோலைகள் உரசும் சப்தங்கள் பாம்பின் மூச்சுப்போல இருந்தன.

நான்காம் நாள் ஒரு இராணுவ 'ஜீப்' தாழையடிக்குப் போனது. நாம் உசாரானோம், திரும்பிவரும்போது அதனைத் தாக்கவேண்டும். ஜெனரேட்டரின் சத்தம் கேட்டால் வித்தியாசமாக இருக்கும் என்பதால் வெகு தொலைவிலேயே அது வைக்கப்பட்டிருந்தது.

கண்ணிவெடியின் சத்தம் காதைச் செவிடாக்கிவிடும் என்று காதுக்குள் பஞ்சு வைத்திருந்தோம். சத்தத்தின் அதிர்ச்சியில் நாக்கைக் கடித்துக் கொள்ளக்கூடாது என்று வாயில் கட்டையும் வைத்திருந்தோம். ஏனென்றால் இதைப்பற்றி ஒருவருக்குமே அனுபவமில்லை. அதுவரை கண்ணிவெடி வெடித்துக் கேட்டதில்லை நாங்கள். (பொன்னாலையில் அது வெடித்த பின்னர்தான், இந்தச் சத்தத்துக்காகவா இவ்வளவு ஆர்ப்பாட்டம் செய்தோம்? என்று எண்ணிக்கொண்டோம்)

வருவது இராணுவத்தின் 'ஜீப்'தான் என்பதை உறுதிப்படுத்திய பின்னரே தாக்குதல் நடத்த வேண்டும். இராணுவத்தின் 'ஜீப்'தான் என்று எப்படித் தெரிந்து கொள்வது?

பற்றைக்குள் வரிசையாக, ஒவ்வொருவராக (மொத்தம் ஐவர்) நிறுத்தப்பட்டோம். ஆகக் கடைசியில் (கோவிலுக்கு மிகக் கிட்ட) நிற்கும் ரகு, வருவது இராணுவத்தின் 'ஜீப்'தான் என்று உறுதிப்படுத்தியதும், "அண்ணை" என்று சொல்ல வேண்டும். அந்தச் சத்தம் கேட்கக்கூடிய தூரத்திலேயே மற்றவர் நிற்கவேண்டும். இப்படி ஒவ்வொருவராக, "அண்ணே அண்ணே" என்று சொன்னதும் இறுதியாக நிற்கும் ராமு சைகை காட்டுவார். அப்போது அருணா ஜெனரேட்டரை இயக்குவான். அப்பையா அண்ணை ஆளியை அழுத்துவார்.

ராமு சமிக்ஞை காட்டாமல் அருணா ஜெனரேட்டரை இயக்கக்கூடாது. அப்பையா அண்ணை ஆளியை அழுத்தக்கூடாது. இவ்வாறு



**Mr & Mrs டாமோடிரன்**

Mrs டாமோடிரன்:- டார்லிங் ரென் ஹெட்ஸ் உள்ள மனிதனுக்கு பேர் என்ன டார்லிங்?

Mr டாமோடிரன்:- நான் பாரதம் படித்தனான் டார்லிங்... மறந்து போனன்...... வெயிட் டார்லிங்..... நான் யோசித்து சொல்லுறன்.

Mrs டாமோடிரன்:- இஸ் இட் பீமன்?

Mr டாமோடிரன்:- யூ ஆர் றைற் - யூ ஆர் றைற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டிப்பாக உத்தரவிட்டிருந்தான் சீலன். வீதியின் மிகக் கிட்டிய தூரத்தில் உபஇயந்திரத் துப்பாக்கியுடன் அவன் நின்றான்.

ஜீப் வந்தது உறுதிப்படுத்தியாயிற்று, - அது இராணுவத்தினர்தான் என்று. ரகு - "அண்ணே" சொல்லியாயிற்று. அடுத்தது நான் "அண்ணே" - அடுத்தவர் "அண்ணே" ...... ஜீப் ஒவ்வொருவரையும் விலத்தியபடி சென்றது. ஏனோ தெரியவில்லை, அன்று மிக மெதுவாகவே வந்தது அந்த ஜீப். நாம் காதில் பஞ்சை இறுக்கிக்கொண்டோம். வாயில் உள்ள கட்டை பலமாகக் கடிவாங்கியது. இதோ......இதோ...... சத்தம் கேட்கப் போகிறது...... 'ஜீப்' மெதுவாக ...... மெதுவாக ... மெதுவாகக் கடந்து போயேவிட்டது. எதிர்பார்க்கவேயில்லை நாங்கள். எல்லோரும் அப்பையா அண்ணையை நோக்கி ஓடினோம்.

"அப்பையா அண்ணை" - என்று ஆத்திரத்துடன் ஓடிவந்தான் சீலன். "தம்பி, ஜீப்பை நான் கண்டனான் ஆமிதானோ எண்டு சரியாகத் தெரியேல்ல. ராமு சிக்னல் தரேல்ல......" சீலனின் கோபத்தைப் பார்த்துத் தடுமாறியபடியே கூறினார் அப்பையா அண்ணை. ராமு சீலனை நோக்கி ஓடிவந்தான். "நொண்டி ராமு .....செவிட்டு ராமு ... கட்டை ராமு......" சீலன் சீறி விழுந்தான். ராமுவுக்குப் பேச வாய் வரவில்லை.

என்ன நடந்தது?...... வரிசையாக நின்றவர்களில் ஒருவர் இடையில் நித்திரையாகிவிட்டார். அதனால் அவருக்கு முன்னேயிருந்தவர் "அண்ணே" என்று சொன்னது அவருக்குக் கேட்கவில்லை. இவர் "அண்ணே" என்று சொல்லாததால் இவருக்கு அடுத்தவர் "அண்ணே" என்று சொல்லவில்லை. ஏனென்றால், அவரால் 'ஜீப்' பைச் சரியாகப் பார்க்க முடியவில்லை. முன்னேயிருந்தவர் "அண்ணே" என்று சொல்லாததால் ராமு அப்பையா அண்ணருக்குச் சமிக்ஞை கொடுக்கவில்லை.

மொத்தத்தில் அன்று எமக்கு ஏமாற்றம். எங்களை நாங்களே நொந்து கொண்டோம்.

'ஜீப்' தாழையடிக்குப் போனதைக் கண்டதுமே மானா குடும்பத்தினர் அந்த இடத்தை விட்டுப் போவதற்கான ஆயத்தங்களுடன் இருந்தனர். ஏனெனில், இராணுவத்தினர் வந்தால் முதலில் அவர்களின் கண்ணுக்குத் தெரியப்போவது இவர்களின் குடிசைதான். ஆனால் 'ஜீப்' அவர்கள் வீட்டைத் தாண்டிப் போனதும் அவர்களுக்குக்கூட ஆச்சரியம்தான் - ஏதோ பிழை நடந்துவிட்டது என்று மட்டும் உறுதிப்படுத்திக் கொண்டார்கள்.

அன்றைய காலகட்டத்தில் 'வாக்கி டோக்கி' எமது கையில் இல்லை. இருந்திருந்தால் இராணுவ வண்டி மீதான முதல் தாக்குதல் இடமாகத் திருநெல்வேலி உச்சரிக்கப்பட்டிருக்காது.

அடுத்த நாள் ஒரு 'ஜீப்' போனது. வழமையான நேரத்துக்கு வெகு நேரம் கழித்தே திரும்பியது. நல்லவேளை, நாம் அவசரப்படவில்லை. அது அரசாங்க இலாகா ஒன்றுக்குச் சொந்தமான ஜீப்.

* * *

மாத்தயா அந்தத் தாக்குதலுக்காகக் கொண்டு சென்ற ஆயுதம் றிப்பிட்டர். நீலநிற டெனிம் கோர்ட் ஒன்று போட்டு, இடுப்பில் தோட்டாப் பட்டியையும் கட்டியிருந்தார் அவர். இதைவிட மேலதிகமாக ஒரு, 38 ரக சுழல் துப்பாக்கியும் வைத்திருந்தார். இந்தக் கோலத்தில் இவர் ஒரு பற்றைக்குப் பின்னால் இருக்கும்போது, பற்றை மறைவில் சலம் கழிக்க வந்தார் ஒரு மீன் வியாபாரி. இருவரும் ஒருவரையொருவர் கண்டுவிட்டனர். உடனே, "டேய்... நீதான்? அந்த ஒழிச்சுத் திரியிற ஆள். சோரன்

## ஐம்பொன்

- எந்த நாள் நாம் சிரிக்காமல் இருக்கின்றோமோ அந்த நாள் வீணாகக் கழிக்கப்பட்ட நாளாகும்.
- பொன் விலங்குகள் இரும்பை விட மோசமானவை.
- அச்சமகலாதவர்க்கு உச்சமில்லை — பாரதி
- பெண்ணை அடைந்தவன் கண்ணை அடைந்தவன்.
- நீங்கள் பூவாக மலரும் சந்தர்ப்பம் இருக்கும்போது ஒன்றுக்கும் உதவாத எருக்கலம் பூவாக மலராதீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றில கொலை செய்தது நீ தான?'' என்று கேட்டார் மாத்தயா. ''ஐயா ..... அது நானில்ல. நான் மீன் விக்கிறனான். என்னை விட்டிடுங்கோ!'' என்று கையெடுத்துக் கும்பிட்டார் அந்த மீன் வியாபாரி. ''சரி, நாங்கள் அவங்களைப் பிடிக்கத்தான் இதில இருக்கிறம். நாங்கள் அவங்களைப் பிடிக்க இருக்கிறத ஆரிட்டையும் போய்ச் சொல்லக்கூடாது தெரியுமோ?..... கவனம்!'' என்று எச்சரித்து அனுப்பினார் மாத்தயா. உலகத்துக் கடவுள்களையெல்லாம் நினைத்தபடியே சென்றார் அந்த மீன் வியாபாரி.

* * *

அந்தக் காலத்தில் சோரன்பற்று இரட்டைக் கொலை வழக்குப் பத்திரிகைகளுக்குத் தீனி போட்டுக்கொண்டிருந்தது. அதில் சம்பந்தப்பட்ட இருவர் பொலீசாரால் கைதாகிவிட்டனர். கைதாகிய இருவரும் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். ஏனையவர்கள் பொலிஸாருக்குப் பயந்து தலைமறைவாகித் திரிந்தனர் - இந்தத் தலைமறைவு வாழ்க்கையில் கள்ளுத் தவறணை அடங்காது. அவர்களைத் தேடிவந்த பொலிஸ் மாதிரித்தான் மாத்தயா நடித்தார்.

* * *

மாத்தயாவிடமிருந்து தப்பினாலும் அந்த மீன் வியாபாரிக்கு இன்னும் பயம் மனதைவிட்டுப் போகவில்லை. அந்தப் பயத்தை விரட்ட சகலரோக நிவாரணி'யான கள்ளுத்தான் வேண்டும். எனவே தவறணைக்குச் சென்றார் அவர். அங்கே சோரன்பற்றுக் கொலையில் சம்பந்தப்பட்டவர்கள் நின்றனர். ''டேய்.. கவனமடா...! உங்களப் பிடிக்க புதுமாதிரிப் பொலிஸ் வந்திருக்கு! அதுக்கு 'இந்தப் பக்கத்திலையும் துவக்கு, அந்தப் பக்கத்திலையும் துவக்கு, இடுப்பில - வெலிற்றில தோட்டா கட்டியிருக்கு! மேல கோட்டும் போட்டிருக்குது! நான் தெரியாத்தனமா ஒண்டுக்குப்போய் அவங்களிட்டப் பிடிபடப்பட்டன். கடவுள் புண்ணியத்தில தப்பியிட்டன். உங்கள எல்லாம் விசாரிச்சவங்கள். கவனமடா நீங்கள்!''-எச்சரிக்கை செய்தார் அவர்.

இதைக் கேட்டதும் கள்ளுக்குப் பதிலாகப் பயம் வயிற்றைக் கலக்கியது. (சோரன்பற்றுக் கொலையில் சம்பந்தப்பட்டவர்களிற்கு) அன்று இரவு மானா வீட்டிற்குப் போனபோது இவ்விடயம் எனக்குத் தெரியவந்தது.

''புதுமாதிரிப் பொலிஸ் எங்கே தங்கியிருக்கு? எத்தனைபேர் வந்துள்ளார்கள்?'' என்ற விபரமெல்லாம் அறியவேண்டுமல்லவா?...... உடனே றெக்கிக்கு ஒழுங்கு பண்ணினார்கள். தலைமறைவாகத் திரிபவர்கள், சிறிய பையன்களைப் பிடித்து தென்னை மரத்தில் ஏற்றினார்கள். அவர்கள் மரத்தில் ஏறிப்பார்த்து, வான் ஒன்று நிற்கிறது; இத்தனை பேர் உள்ளனர் என்று சொன்னார்கள். எனவே உஷாராகிவிட்டார்கள் அவர்கள். தொடர்ந்து எமது நடமாட்டம் கண்காணிக்கப்பட்டது. (தென்னை வட்டுக்குள்ளிருந்து எம்மைக் கண்காணித்த விடயம் பின்னரே எமக்குத் தெரியவந்தது)

இராணுவத்தையும் காணவில்லை. ''பற்றைக் காடுகளுக்குள் பொலிஸ் நிற்கிறது'' என்ற கதையும் பரவிவிட்டது. இனி இப்படி இருப்பதில் பிரயோசனமில்லை என்று தோன்றவே, அங்கிருந்து புறப்படத் தீர்மானித்தோம். அதன்படி வா(V)ன் புறப்பட்டுவிட்டது. நானும் மாத்தயாவும் மட்டும் மானா வீட்டில் தங்கினோம். புதைத்த கண்ணிவெடிகளை இரவில் அகற்றிக்கொண்டு போகவேண்டுமென்பதற்காக.

இரவு இரண்டு மணியளவில் அங்கே சென்று பார்த்தோம். கண்ணிவெடிகள் அகற்றப்பட்டிருந்தன. காலையில் அப்பகுதியில் தெரிந்த காலடிகளைத் தொடர்ந்தோம். வெங்கிணாந்தியைப் புதைத்த இடமும் கிளறப்பட்டிருந்தது. எனவே, இது உள்ளூர்வாசிகளின் வேலைதான் என்று விளங்கிவிட்டது. அவர்களைத் தேடிப் பிடித்து, அவற்றை வாங்கிவருமாறு என்னிடம் கூறிவிட்டு மாத்தயா யாழ்ப்பாணம் போய்விட்டார்.

## குறுமணி

### பண் பாடு

''டேய்...... ரண்டு பிளேன்ரி போடு — பாசல்.' — தேனீர்க் கடைப் பையனிடம் எதிர்க் கடைப் பையன். முதலாளிக்குச் 'சுர்'ரென்றது.'' இஞ்ச வா! என்ன டேய் பிடேய்? மரியாத தெரியாதோ?''

பக்கத்துப் புடவைக் கடை முதலாளி வந்தார். ''டேய் பெடியா, செம்பில தண்ணி கொண்டா.'' தேனீர்க் கடை முதலாளியின் முப்பத்திரண்டும் முகம் முழுதும்; ''முதலாளிய ரண்டு நாளா காணயில்ல? ''

மையோன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பரியாரியார்: நான் தந்த பஸ்பம் சாப்பிட்டுத்தானே உடம்பு வைச்சது.

ஒருவர்: இல்லை பரியாரியார்... நான் பிள்ளையார் அரிசி ஆலையிலை குத்தின அரிசி வகையள் சாப்பிடுறனான்.

★ *நாட்டரிசி*

*தரம் - I*

*தரம் - II*

★ *தீட்டுப்பச்சை அரிசி*

★ *உடைத்தபச்சை அரிசி*

**விற்பனை**



# பிள்ளையார்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

★★★★★★★★★★★ **அரிசி ஆலை** ★★★★★★★★★★

மூத்த விநாயகர் கோவிலடி

**கரணவாய் - கரவெட்டி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்கனவே அவர்கள் கொலை செய்தவர்கள்; கண்ணிவெடிகளைக் கிளறும்போது 'இது இயக்கத்துக்குச் சொந்தமானது' என்று தெரிந்திருப்பார்கள். அப்படியிருந்தும் கிளறிக் கொண்டு போனவர்களை என்ன செய்வது? கையில் ஆயுதமுமில்லை. சிக்கல்தான். மிரட்டத்தான்வேண்டும். ஆனால் நான் மிரட்டி இவர்கள் மிரளுவார்களா? எனது உடம்பை ஒருதரம் நன்றாகப் பார்த்துக்கொண்டேன். வேறு வழியில்லை; மிரட்டிப் பார்த்துவிடத்தான் வேண்டும்.

ஏற்கனவே மானா குடும்பத்தினருக்கும் எங்களுக்கும் தொடர்பிருக்கிறது என்ற விடயம் ஊருக்குள் புகைந்துவிட்டது. தலைக்குமேல் வெள்ளம் போயாயிற்று - இனிச் சாணாவது? முழமாவது? மானா குடும்பத்தவர் மூலமே அவர்களுடன் தொடர்புகொண்டேன்.

அவர்களில் ஒருவர் எம்மைச் சந்தித்தார். ஒரு தென்னந்தோட்டத்தில் இச்சந்திப்பு நிகழ்ந்தது சந்திக்க வந்தவருக்கு என்னைக் காணப் பயம்; எனக்கு அவரைக் காணப் பயம். நான் அவரை மிரட்டுகிறேன். அவர் என்னை மிரட்டவில்லை. இதுதான் வித்தியாசம்.

"ஏன் அதைக் கிளறி எடுத்தனீங்கள்? நாங்கள் வந்திருக்கிறது எப்பிடி உங்களுக்குத் தெரியும்?" போன்ற கேள்விகளை நான் எழுப்பினேன். அதற்கு அவர், மீன் வியாபாரி தவறணையில் எச்சரித்தது முதல் தொடர்ந்து தாங்கள் தென்னையில் பையன்களை ஏற்றி அவதானித்தது, வானைக் காணாதபடியால் தாங்கள் எமது காலடிகளைத் தொடர்ந்து வந்தது, அப்போது வயர் ஒன்று தெரிந்ததால் அதை இழுத்துக் கொண்டுபோய் வீதியில் கண்ணிவெடியைக் கண்டுபிடித்தது, வெங்கிணாந்திப் பாம்பைப் புதைத்த இடத்தைத் தாங்கள் கிளறிப்பார்த்தது வரை எல்லாவற்றையுமே கூறினார். இறுதியில் கிளறி எடுத்த கண்ணிவெடிகளைத் தருவதாக ஒப்புக்கொண்டார். தாங்கள் கழற்றிய ஒரு குழாயின் மருந்துகள் கொட்டிவிட்டதாகவும் ஏனையவற்றை உடன் தருவதாகவும் கூறினார். சரியென்று நான் மானா வீட்டுக்குத் திரும்பிவிட்டேன்...... ஒரு மணித்தியாலத்தில் மானா ஒரு சாக்கில் அனைத்தையும் சுமந்து வந்தார்.

அப்பாடா! ஒரு மாதிரி விஷயம் சரிவந்துவிட்டது. இனிக் கொண்டுபோக வேண்டும். இரண்டு மைல் தூரத்துக்கும் தோளிலும் தலையிலுமாக மாறிமாறித் தூக்கிக் கொண்டு புதுக்காட்டுச் சந்திக்கு வந்தேன். அங்கிருந்து கிளிநொச்சி - யாழ்ப்பாணம் பஸ்ஸில் ஏறி அரியாலை மாம்பழம் சந்தியில் வந்திறங்கினேன். (இடையில் சாவகச்சேரி பொலிஸ் நிலையம் இருந்தது)

மாசாரிலிருந்து கொண்டுபோன அதே பைப்புகளைத்தான் அடுத்தநாள் இரவு பொன்னாலைப் பாலத்தில் புதைத்தோம்.

* * *

வாக்கி டோக்கி அன்று இருந்திருக்குமானால் எமது சாதனைகள் விரைவுபடுத்தப்பட்டிருக்கும். இக்கட்டத்தில் சந்தோசத்தை நினைத்துப் பார்த்தேன், தனது எதிர்காலத்தைவிட சந்ததியின் எதிர்காலத்தை நினைத்த அந்தக் காலம் - தாக்குதலுக்குக் கிடைக்கும் சந்தர்ப்பத்தை இழக்க மனமில்லாமல் "ரெஸ்ற் அடுத்த வருஷம் எடுக்கலாம்" என்ற சந்தோசத்தின் நிலைப்பாடு...... இவற்றை நினைத்துக்கொண்டு இன்றைய தினசரியை மறுபடியும் புரட்டுகின்றேன்.

"யாழ் பல்கலைக்கழக வெளிவாரி மாணவருக்கு எதிராக உள்வாரி மாணவர் போர்க்கொடி" என்ற தலைப்பிலான செய்தியை மீண்டும் படிக்கிறேன்.

"வெளிவாரி மாணவர்களுக்கு பல்கலைக்கழக நூலகத்தில் புத்தகங்களைப் படிக்கும் உரிமை வழங்கக்கூடாது" என்பது உட்பட சில பிரச்சனைகளை உள்வாரி மாணவர்கள் எழுப்பியிருக்கின்றனர் என்று காணப்படுகின்றது.

தமிழரின் உயர்கல்வி உரிமை மறுக்கப்பட்டதுதான் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம் தீவிரமடைவதற்கு ஒரு முக்கிய காரணமாக அமைந்தது. 1984 ஆம் ஆண்டின் முற்பகுதியில், தென்பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மாணவர்க்கு யாழ் பல்கலைக்கழகம் அல்லது மட்டக்களப்புப் பல்கலைக்கழகத்தில் இடம் வழங்கப்பட வேண்டும் என்று இதே பல்கலைக்கழக மைதானத்தில் நடந்த போராட்டங்கள் - இடம் பெயர்ந்த மக்களுக்காக இப்பல்கலைக்கழக மாணவர்கள் மேற் கொண்ட நிவாரணப் பணிகள் - களத்தில் உயிர் நீத்த பல்கலைக்கழக மாணவர்கள் அலெக்ஸ், சுதர்சன், நித்திலா, நளினன், புவி எம்.பி......எல்லாவற்றையும் நினைக்கின்றேன்.

இன்றைய பத்திரிகைச் செய்தி நெஞ்சை அழுத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# GOULD இன் குறும்பு

வல்வை ந. அனந்தராஜ்

ஆனந்தாக் கல்லூரியில் இருந்து வெளி யேறிய கூழ் (Gould) தனது வாதப் பிரதி வாதங்களினாலும், குறும்புத்தனங்களினாலும் கொழும்பு மாநகரில் பிரபல்யம் அடையத் தொடங்கிவிட்டான்.

அவனது வளர்ப்புத் தந்தை பெரியவர் குழந்தைவேற்பிள்ளை, அவனை பாரிஸ்டர் ஆக்க வேண்டும் என்ற ஆவலில் லண்டனுக்கு அனுப்பி வைத்தார். கூழை, சட்டத்துறையில் ஒரு மேதா வியாக்கி, சமூகத்தில் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவேண்டும் என்ற ஆவல், அவனது குறும்புத்தனங்களைப் பார்த்த பின்னரே அந் தப் பெரியவருக்கு ஏற்பட்டிருக்க வேண்டும்.

பெரியவரின் விருப்பப்படியே 'கூழ்' பாரிஸ் டராகப் பட்டம் பெற்றுக் கொண்டு கொழும்பு திரும்பி, சொந்த நாட்டிலேயே சட்டத்துறைத் தொழிலை மேற்கொண்டு வந்தார்.

லண்டனில் இருந்து திரும்பும் பொழுது, கூழ் வெள்ளைக்காரப் பெண் ஒருத்தியை வாழ்க்கைத் துணைவியாகக் கூட்டிக் கொண்டு வந்தது, பெரியவர் குழந்தைவேற்பிள்ளைக்கு அதிர்ச்சியைக் கொடுத்தாலும், இருவரும் அவர் மீது காட்டிய மதிப்பையும், அன்பையும் உணர்ந்து, அவர்களை மனதார ஏற்றுக் கொண் டார்.

லண்டனில் படித்து, அந்தச் சூழலில் சில வருடங்கள் பழக்கப்பட்டு வாழ்ந்தாலும் கூட, இலங்கைக்குத் திரும்பிய கூழின் போக்கும், குறும்புத்தனங்களும் மாறவில்லை.

சில காலம் கொழும்பிலேயே ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து மனைவியுடனேயே வாழ்ந்து வந்த 'கூழ்', பிரித்தானிய அரசின் சட்டதிட் டங்களையும், அடக்குமுறைகளையும், சுதேசி களை அடிமைகளாகக் கருதும் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் போக்கையும் கண்டு மனம் கொதித்துக் கொண்டிருந்தார்.

அந்தக் காலப்பகுதியில் கொழும்பு மாநகரின் பாதுகாப்பு, சூழலைப் பேணுதல், சிவில் நிர் வாக உறுதிப்பாடு ஆகியவற்றைப் பிரித்தானிய பொலிஸ் படையினரே மேற்கொண்டு வந்தனர்.

அந்தக் கட்டுப்பாட்டுக் காலப்பகுதியில் தெரு வீதிகளில் குப்பை கூளங்களைப் போடு வதோ, மலசலம் கழிப்பதோ குற்றமாகப் பிர கடனப்படுத்தியிருந்த காவல்துறையினர், இத் தகைய குற்றச் செயல்களைப் புரிபவர் மீது கண்ட இடத்தில் தண்டப் பணம் அறவிட்டும் வந்தனர்.

''சே!...... எங்கடை நாட்டிலை வந்து இந்த வெள்ளைக்காரன் ஒரு விசார ணையோ நீதி நியாயமோ இல்லாமல் தண் டம் அடிக்கிறதோ......?''

'கூழ்' தனது நண்பர்களிடத்தில் அடிக்கடி கூறி வேதனைப்படுவார். பிரித்தானிய காவல் துறையின் இத்தகைய சட்டதிட்டங்களை வேறு எவரும் பொருட்படுத்தியதாகக் கூடத் தெரிய வில்லை.

ஒருநாள் சன நடமாட்டம் நிறைந்த நேரத் தில், 'கூழ்' சுங்கானைப் புகைத்தபடி நடந்து வந்து கொண்டிருந்தார். ஆறுதலாகப் புகையை விட்டபடி ஒரு ஆங்கிலப் பாடலை உதடுகளுக் குள் முணுமுணுத்தபடியே நடந்து கொண்டி ருந்த கூழுக்கு, சிறுநீர் கழிக்க வேண்டும்போல் இருந்தது ... இருக்க வேணும் என்று இருந்த ஆவலையும் வலிந்து அடக்கியபடி கூழ் 'விறுவிறு' என்று போய்க்கொண்டிருந்தார். சுற்றுமுற்றும் திரும்பிப் பார்த்த கூழுக்கு, கண்ணுக்கு எட் டிய தூரத்தில் மலசல கூடம் இருப்பதற்கான அறிகுறியே தெரியவில்லை.

பொறுமை இழந்த கூழுக்கு மேலும் தொடர்ந்து நடப்பதற்கு முடியவில்லை. அடி வயிற்றில் கனத்துக் கொண்டிருந்தது...... சிறிது நேரம் அந்த இடத்தில் நின்று, அங்கு மிங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தடவை பார்த்துவிட்டு, வீதியோரமாக நின்ற வாகை மரத்திற்கு அப்பால் போய் நின்று, கண்ணை இறுக மூடிக் கொண்டு "சல...... சல......" என்று சிறுநீரைக் கழித்துக் கொண்டிருந்தார்.

"அப்பாடா......" நீண்ட பெருமூச்சு ஒன்றை விட்டுக் கொண்டு திரும்பிய 'கூழின்' தோளில் ஒரு பலமான இரும்புக் கரம் விழுந்ததும், திகைத்துப் போய், நிமிர்ந்து பார்த்ததும் சிறிது அதிர்ந்து விட்டார்.

"சேக்......! இந்த நாசமாப் போனவன், இங்கை வந்து விட்டான்......"

மனதிற்குள் நினைத்தபடியே அசடு வழியச் சிரித்துக் கொண்டு நின்றார்.

ஆம்!...... அங்கே, பிரித்தானிய பொலிஸ்காரர் ஒருவர் கூழை, முறைத்துப் பார்த்தபடி கோபமாக நின்று கொண்டிருந்தார்.

"ஏய்!...... இங்கை என்ன செய்யிறாய்? தெருவில் இப்படித் திறந்த வெளியில் சலம் விடக்கூடாது என்று உனக்குத் தெரியாதா? ......"

சிறிது அதட்டலுடன் கேட்டுக்கொண்டிருந்த பொலிஸ்காரரின் கையை விலக்கியபடியே 'கூழ்' எதையோ தேடுபவன்போல் அங்கு மிங்கும் பார்த்தார்.

"ஏய்!...... நான் என்ன கேட்கிறன்...... நீ என்ன அங்கை, இங்கை பார்க்கிறாய்......?"

"இல்லை...... இதிலை சலம் விடக்கூடாது என்று எங்கேனும் எழுதியிருக்கா என்று பார்க்கிறேன்."

'கூழ்' மிகவும், சாவதானமாகக் கூறிக் கொண்டே, தன்பாட்டில் முன்னோக்கி நடந்து கொண்டிருந்தார்.

"ஏய்!...... என்ன கிண்டலா பண்ணுறாய்?...... எங்கடை பிரிட்டிஷ் லோவைப் பற்றி உனக்கு என்ன தெரியும்......?"

அந்தப் பிரித்தானிய பொலிஸ்காரர், இப்படிச் சொன்னதும், 'கூழ்' தனக்குள் சிரித்துக் கொண்டார்.

"சரி!...... சரி!...... மிஸ்டர் பொலிஸ்...... இப்ப நான் என்ன செய்ய வேணும்..... ?"

"இப்ப உமக்கு பத்து ரூபா தண்டம் அடிச்சிருக்கிறன்...... உம்முடைய பெயர், விலாசத்தைச் சொல்லும்......"

பொலிஸ்காரர், கூழைப் பார்த்துக் கூறிக் கொண்டே, தனது காற்சட்டைப் பையினுள் இருந்த குறிப்புப் புத்தகத்தையும், பற்றுச்சீட்டுப் புத்தகத்தையும் எடுத்து எழுதத் தொடங்கி விட்டார்.

கூழ், தனது பெயரையும் தான் நின்ற அந்தத் தெருவின் பெயரையும் கூறிவிட்டு, பத்து ரூபாவை எடுத்துப் பொலிஸ்காரரின் கையில் வைத்து, அதற்கான ரசீதையும் வாங்கி வைத்துக் கொண்டார்.

"தாங்க் யூ......!"

பொலிஸ்காரர் காசைப் பெற்று, நன்றியைக் கூறிவிட்டு, அப்பால் போய்க்கொண்டிருந்தார்.

அந்தப் பொலிஸ்காரர் போவதையே கண்கொட்டாது பார்த்துக் கொண்டிருந்த கூழுக்கு, அழுகையும், ஆத்திரமும்தான் வந்தது.

"இதிலை சலம் விட்டதற்கு இந்த இடத்திற்குப் பத்துப் ரூபாவை அநியாயமாகக் கட்டி விட்டன்......"

தனக்குள் வெந்து,மனம் குமுறிய கூழ், சிறிது நேரம் அங்கே நின்ற மரத்தின் கீழேயே இருந்து தான் சலம் விட்டு ஈரமாகிப் போன இடத்தையே பார்த்துக் கொண்டிருந்தார்.

சில மணி நேரம் அப்படியே இருந்த கூழ், எதையோ யோசித்துக் கொண்டவர்போல் எழுந்து விறுவிறு என்று நடக்கத் தொடங்கி விட்டார்.

மறுநாள் காலையிலேயே, சன நடமாட்டம் அதிகரிப்பதற்கு முன்னரே, கூழ் சிறுநீர் கழித்த இடம் சுற்றி அடைக்கப்பட்டு வேலி இடப்பட்டிருந்தது. அதில்,

"இது கூழின் இடம்" என்ற பெயர் எழுதப்பட்ட அட்டை தொங்கிக்கொண்டிருந்தது. அந்த அடைப்புக்கு அருகே, கூழ் சுங்கானைப் புகைத்தபடியே நின்று, அன்றைய தினசரிப் பத்திரிகையைப் பார்த்துக் கொண்டு நின்றார்.

அந்தத் தெரு வழியே போய்க் கொண்டிருந்தவர்களால் சிரிப்பை அடக்க முடியவில்லை. சிலர், 'கூழின்' கோமாளித்தனத்தை எண்ணி, நையாண்டி பண்ணிக் கொண்டு சென்றனர்.

கூழ், அவை எதையுமே பொருட்படுத்தாது, பத்திரிகையைப் படித்துக் கொண்டு நின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" ஏய்! ... இது என்ன? பப்ளிக் இடத்திலே அடைத்து எப்படி உன் பேரைப் போட முடியும்...

நட ... பொலிஸ் ஸ்ரேசனுக்கு ... "

அந்த வழியால் காலைக் கடமைக்கென வந்த பொலிஸ்காரர் கூழின் செய்கையைக் கண்டு ஆத்திரமடைந்து, அவரைப் பொலிஸ் ஸ்ரேசனுக்குக் கூட்டிச் சென்று வழக்குப் பதிவு செய்தனர்.

மறுநாள், நீதி மன்றத்தில், கூழ், பொது இடமொன்றில், அனுமதியின்றி வேலியிட்ட குற்றத்திற்காகக் கொண்டு வரப்பட்டு குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டார்.

" நீர் தானே மிஸ்டர் கூழ்...? "

நீதிபதி, குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டிருந்த கூழைப் பார்த்துச் சம்பிரதாயமாகக் கேட்கின்றார்.

பார்வையாளர் கலரியில் சனக் கூட்டம் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. இந்த வழக்கின் மூலம் கூழின் நியாயத்தைக் கேட்க வேண்டுமென்பதற்காகப் பலர் முண்டியடித்தபடி நின்றனர்.

" பொது இடத்தில் பலர் பாவிக்கும் பாதையில், ஒரு பகுதியை மூடி அடைத்து' உன்னுடைய இடம் என்று 'உரிமை கோருவீர் ... இது பொது மக்கள் பாதுகாப்புச் சட்டத்திற்கே முரணானது அல்லவா? "

" பிரபு ... எனக்கும் தெரியும் ... ஆனால் அந்தச் சிறிய துண்டு நிலத்திற்கு என அரசாங்கத்திடம் பணம் செலுத்தி, வாங்கிய பின்னர்தான் அப்படி வேலி அடைத்தேன்... எனது சொந்த இடத்தில் வேலி அடைப்பது தவறா பிரபு? ... "

குற்றவாளிக் கூண்டில் நின்று, சாவதானமாகக் கூறியபடியே, கூழ் நீதிபதியையும், அங்கே நின்ற பொலிஸ்காரரையும் பார்த்தார்.

கூழ் சொல்வதையே கேட்டுக் கொண்டிருந்த பொலிஸ்காரரின் மனம் அமைதியிழந்து அங்கலாய்த்துக் கொண்டிருந்தது.

" என்ன! ... அதற்கு நீர் விலை கொடுத்து வாங்கினீரா ?... அதற்கான ஆதாரம் எதுவும் இருக்கா? " நீதிபதி, ஆச்சரியத்துடன் கூழைக் கேட்டுக்கொண்டிருந்தார்.

'கூழ்' சிரித்துக் கொண்டே, தன்னிடம் இருந்த பற்றுச் சீட்டை அவரிடம் எடுத்துக் கொடுத்தார்.

"புளூ மெண்டல் வீதியின், பொது இடத்தில் திறந்த வெளியில், சிறுநீர் கழித்தமைக்காக இந்த இடத்திற்கெனக் கூழிடம் இருந்து ரூபா பத்து பெறப்பட்டது"

அதில் எழுதப்பட்டிருந்ததைப் பார்த்து, நீதிபதி சிறிது நேரம் கண்ணை மூடியபடியே சிந்தித்துக் கொண்டிருந்தார்.

"சேர்!... நான் இந்த இடத்தில் திறந்த வெளியில் சிறுநீர் கழித்தமையால், அந்த இடத்திற்காகவேதான் பத்து ரூபாவைச் செலுத்தினேன். திறந்த வெளியில் இனிமேல் சிறுநீர் கழிக்காது இருப்பதற்காகவே தான் அதனை மூடி அடைத்தும்விட்டேன்."

கூழ் அமைதியாகச் சொல்லிவிட்டுப் பார்வையாளர் கலரியை நோக்கித் தன் பார்வையைச் சுழலவிட்டார்.

திறந்த வெளியில், பலர் பார்த்திருக்க சிறுநீர் கழித்ததனால் குற்றம் அடிக்கப்பட்டமையால், அதனை மூடி அடைத்ததாகக் கூழ் கூறிய நியாயத்தைக் கேட்டதும், நீதிபதி உள்ளூரச் சிரித்துக் கொண்டார்.

கூழிடமிருந்து பெற்ற பணத்தைத் திருப்பிக் கொடுத்து அவரை விடுதலை செய்யுமாறும் தீர்ப்பு வழங்கிய நீதிபதி,

"இனிமேல் கண்ட இடத்தில் விசாரணை இன்றி பணம் அறவிடக்கூடாது"
என்றும் பொலிஸ்காரரிடம் கூறினார்.

கூழின் நியாயத்தை நேரில் கண்ட மக்கள், ஆரவாரித்துக் கொண்டே நீதி மன்றத்தைவிட்டு வெளியேறிக் கொண்டிருந்தனர்.

(தொடரும்)

---

கனகம்:- என்ன கிழவன் பொல்லை விட்டிட்டு இவ்வளவு உயர வேலியப் பாஞ்சு கடந்து வருகுது! படிக்கிற காலத்தில தடை தாண்டி ஓட்டம் ஓடினவரோ?

மகேஸ்:- மகன் வெளிநாடு போனதுக்குப் பிறகு இண்டைக்குத்தான் அவன்ர கடதாசி வந்திருக்கு.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவை மீட்டல்





பாடசாலைப் பிரவேசப் பாராட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணன் எமது நாத நிதியம்

காற்றினிலே வரும் கண்ணனின் கீதம் இன்று தமிழர் இதயங்களில் விடுதலை உணர்வைத் தளிர்க்கச் செய்து பண்ணொலி கொஞ்சுகிறது. பிரபலமான திரைப்படப் பாடல்களை அவாவும் இரசிகர்களின் உள்ளங்களை இன்று கண்ணன் இசையமைத்த நெய்தல் பாடல்கள் கொள்ளைகொண்டு ரீங்காரமிடுகின்றன. ஈழத்துத் தமிழ் இசையுலகில் இது உன்னதமான ஒரு புதிய திருப்பம். ஒரு காலத்தில் 'கண்ணன் கோஷ்டி' என்றால் இரசிகர்கள் படையெடுத்துச் சென்ற வரலாறு பலருக்குத் தெரியும். இன்று எதிரிகளின் பாசறையை நோக்கி வீரர் படையெடுக்க இசையமைத்த இசையமைப்பாளர் கண்ணன் ஒரு சாதனையாளராகவும் உயர்ந்து நிற்கிறார். அவரை, அவரது பிரசாந்தி நிலையத்தில் சந்தித்து உரையாடினேன்.

❋ நீங்கள் இசையமைத்த சில பாடல்கள் கர்நாடக இசையை அடிப்படையாகக் கொண்டவையாக விளங்குகின்றன. கர்நாடக இசையை நீங்கள் கற்றிருக்கிறீர்களா?

☼ ஆம். சங்கீத பூஷணம் என். சண்முகரத்தினம், சங்கீதபூஷணம் இராஜலிங்கம் ஆகியோரிடம் கர்நாடக சங்கீதத்தைப் பயின்றிருக்கிறேன். அந்த ஞானம் இல்லாமல் இசையமைப்பில் வெற்றி காணமுடியாது. கர்நாடக சங்கீதம் இசைக்கு தாயும் தந்தையும் மாதிரி.

❋ உங்களது 'நெய்தல்' பாடல்களை முதல் முறையாகக் கேட்டபோது என் உள்ளம் பூரித்தது.

☼ நன்றி. என்னைப் பொறுத்தவரை இன்னும் நல்லாகச் செய்திருக்கலாம். ஆனால் போதிய வசதிகள் இல்லை.

❋ பக்க வாத்தியங்கள்பற்றிக் குறிப்பிடுகிறீர்களா?

☼ யாழ்ப்பாணத்தில் நவீன இசைக் கருவிகள் மிகக் குறைவு, அவற்றை வாசிக்கக்கூடிய கலைஞர்களும் அரிது. சில சாதாரண இசைக் கருவிகளைக்கூட புதிதாக வாங்க முடியாது. எமக்கு இருக்கும் வசதிக்கேற்ப இசைக் கருவிகளையும், கலைஞர்களையும், வைத்துக்கொண்டு இசையமைத்து வருகிறேன். 'ஆழக்கடல் எங்கும்' என்ற பாடலுக்குச் சிரட்டை, வயலின், தவில், கிற்றார், மிருதங்கம், தபேலா ஆகிய இசைக்கருவிகளைப் பயன்படுத்தியிருக்கிறேன். கொழும்பு, கண்டி போன்ற தெற்குப் பகுதிகளில் என்போன்ற இசைக் கலைஞர்களுக்குச் சிறந்த பல வசதிகள் இருக்கின்றன. அரசாங்கமும் அவர்களுக்கு ஆதரவு அளித்துவருகிறது.

❋ வசதி குறைந்த நிலையை வைத்துக் கொண்டே உங்கள் திறமையைக் காட்டி வருகிறீர்கள். அதுவே தனித்திறமை. உங்களுக்கு இளமையிலே இசையிலுள்ள ஆர்வம்தான் இப்படி வளர்ந்திருக்கிறது என்று கருதுகிறேன்.

☼ ஆம். எனது குடும்பம் பரம்பரையாக இசையில் ஈடுபாடு உள்ளது. எனது தந்தையார் பல்வேறு வாத்தியங்களை வாசிக்கக்கூடியவர். அந்தச் சூழ்நிலையில் எனக்கு ஆர்வம் பிறந்தது.

❋ நீங்கள் யாரிடம் இசைக் கருவிகளை வாசிக்கக் கற்றீர்கள்?

☼ நான் குருவாக ஒருவரை வைத்து எந்த வாத்தியத்தையும் பயிலவில்லை. குருவால் அடிப்படை இலக்கணத்தைச் சொல்லித்தர முடியும். கலைத் திறமையை அவரால் சொல்லித்தர முடியாது. அது நம்மிடம் இயல்பாகவே ஊற்றெடுக்க வேண்டும். அதனால் ஒருவரிடம் பாடங்கேட்கக் கூடாது என்று நான் கூறவில்லை. எனது தந்தையார் இசைக் கருவிகளை வாசிப்பதைப் பார்த்தும் கேட்டும் ஆர்வத்தினால் நானும் வாசிக்க முயன்றேன். அதுபோல வேறு கலைஞர்கள் வாசிப்பதையும் அவதானித்து மேலும் வாசிக்கக் கற்றுக்கொண்டேன். அந்தக் காலத்தில் தமிழ் நாட்டிலிருந்து இசைக் குழுவினர் திருவிழாக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலங்களில் யாழ்ப்பாணம் வந்து தங்கியிருந்து இசை நிகழ்ச்சிகளை நடாத்தி வந்தார்கள். கமலகுமாரி, ஆனந்தவல்லி, கஸ்தூரிபாய் முதலிய குழுவினரைக் குறிப்பாகக் கூறலாம். சினிமாப் பாடல்களுக்கு இசைத்தட்டில் உள்ள மாதிரியே அக்குழுக்களிலுள்ள வாத்தியக் கலைஞர்கள் வாத்தியங்களை வாசித்தமை இங்கு புதுமையாகவும் உள்ளக் கிளர்ச்சியை ஏற்படுத்துவதாகவும் இருந்தது. அவர்களுடைய இசை நிகழ்ச்சிகளையெல்லாம் நான் தவறாது கேட்பேன். பல்வேறு வாத்தியங்களை எப்படி வாசிக்கிறார்கள் என்ற நுணுக்கங்களை நுணுக்கமாக அவதானித்து நானும் அப்படி வாசிக்கப் பழகுவேன். அவர்களுக்கு ஓய்வான நேரங்களில் அவர்களோடு இசை நுணுக்கங்கள், இசைக் கருவிகளை வாசிக்கும் நுட்பம்பற்றியெல்லாம் உரையாடுவேன். மெல்லிசைப் பாடல்களுக்கு வாத்தியங்களை எந்த இடத்தில் எப்படியெல்லாம் வாசிக்க வேண்டும் என்ற ஒழுங்கு முறையினை அவர்கள் வாசிப்பதை அவதானித்துக் கற்றுக் கொண்டேன். ஆர்வமும் அவதானிப்பும் விடா முயற்சியும் இருந்தால் நாம் எதையும் சாதிக்கலாம்.



❋ நீங்கள் எந்த இசைக் கருவியை முதலில் வாசிக்கப் பழகினீர்கள்?

☼ ஆர்மோனியம், பின்பு கிற்றார், ஓர்கன் ஆகிய வாத்தியங்களை வாசிக்கப் பழகிக் கொண்டேன். வயலினை ஓரளவு வாசிப்பேன்.

❋ 'கண்ணன் கோஷ்டி' யை எப்போது ஆரம்பித்தீர்கள்?

☼ சரியாக ஆண்டைக் கூறமுடியாது. வாத்தியங்களை வாசிப்பதிலுள்ள சுழிவு நெளிவுகளை எனது முயற்சியால் அறிந்து கொண்டபின் வேறு இசைக் கலைஞர்களையும் சேர்த்து எனது கோஷ்டியை ஆரம்பித்தேன்.

❋ பாடல்களுக்கு இசையமைக்கும் துறைக்கு எப்படி வந்தீர்கள்?

☼ இசைக்கருவிகளை வாசிக்கப் பழகும்போதே பாடல்களுக்கு இசையமைக்க வேண்டும் என்ற ஆர்வம் எனக்கு இருந்தது இசைக் கலைஞர்களின் சொந்த சிருஷ்டி இசைக்கு (Creative music) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் வாய்ப்பு அளித்துவந்தது. அதன் அடிப்படையில் 1960 ஆம் ஆண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரை வருடப் பிறப்பன்று எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. நான் இசையமைத்த பாடல்கள் அன்று ஒலிபரப்பானது. நானும் எனது இசைக் குழுவினரும் அதில் பங்குபற்றினோம். வானொலி, ரூபவாகினி ஆகியவற்றிலும் நான் இசையமைத்த பாடல்கள் ஒலிபரப்பப்பட்டன.

❋ நாடகம், திரைப்படம் ஆகியவற்றுக்கும் இசையமைத்துள்ளீர்கள் அல்லவா?

☼ ஆம், தனிப்பாடல்களுக்கு இசையமைப்பது வேறு. திரைப்படம், நாடகங்களுக்கு இசையமைப்பது வேறு. பாத்திரங்களின் உணர்ச்சிகளைப் பிரதிபலிப்பவையாக, காட்சிகளின் தன்மைகளைச் சித்திரிப்பவையாக பாடல்களுக்கு இசையமைக்க வேண்டும். அதேபோலத்தான் பின்னணி இசையும் அமைக்க வேண்டும். பாத்திரங்களின் உணர்வுகளுடன் எமது இசைக்கருவிகளின் இசையை இழையவிட்டு இரசிகர்களின் உணர்வைத் தூண்டிப் பாத்திரங்களின் உணர்வோடும், கதைச் சம்பவங்களோடும் அவர்களை லயப்படுத்த வேண்டும்.

❋ அதனைப் பாடல்கள் எளிதாகச் செய்கின்றன.

☼ பாடல்களில் பொருள் பொதிந்த உணர்ச்சியூட்டும் சொற்கள் இருக்கின்றன. அவை எந்த உணர்ச்சியை ஊட்ட எழுதப்பட்டனவோ அந்த உணர்ச்சியை ஊட்டத்தக்க இசையை அமைத்துப்பாடும்போது இரசிகர்கள் இலகுவில் அந்த உணர்ச்சியோடு ஒன்றித்துவிடுவார்கள். அவர்கள் மனதில் அந்த உணர்வு ஆழப்பதிந்துவிடுகின்றது. நான் சங்காரம், உறவுகள், புதியதொரு வீடு, பொறுத்தது போதும், மண் சுமந்த மேனியர், யுகதர்மம், துக்ளக், உயிர்த்தெழுந்த மனிதர் கூத்து முதலிய நாடகங்களின் பாடல்களுக்கு இசையமைத்ததுடன் பின்னணி இசையும் அமைத்துள்ளேன். அவைக்காற்றுக் கழகத்தின் நாடகங்களுக்கும் இசையமைத்துள்ளேன். இதில் நாடகங்களை உருவாக்கிய குழந்தை சண்முகலிங்கம், தாசீசியஸ், பாலேந்திரா, மௌனகுரு ஆகியோர் அளித்த ஆதரவையும் இங்கு குறிப்பிட வேண்டும். திரைப்படங்கள் என்றால் கோமாளிகள், ஏமாளிகள், தெய்வம் தந்த வீடு ஆகியவற்றைக் குறிப்பிடலாம். நான் இதுவரை நாடகங்களுக்கு இசையமைத்த பாடல்களையும் ஒலிப்பதிவுசெய்து விரைவில் வெளியிட இருக்கின்றேன்.

❋ இப்போதைய தமிழ்த் திரைப்படப் பாடல்களுக்கும் இருபது இருபத்தைந்து வருடங்களுக்கு முந்திய தமிழ்த் திரைப்படப் பாடல்களுக்கும் அதிக ஏற்றத்தாழ்வு இருப்பதாகத் தெரிகிறது. முன்னைய பாடல்கள் பல இன்றும் நெஞ்சில் இனிக்கின்றன. இப்போதைய பாடல்களில் வாத்தியங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்கள் என்று கருதுகின்றேன். இப்போதும் சில நல்ல பாட்டுக்கள் 'இசையமைக்கப்படுகின்றன. ஆனால் முன்னைய பாட்டுக்கள் போல் நீண்ட காலத்திற்கு மக்கள் மனதில் நிற்குமா என்ற கேள்வி எழுகிறது.

☼ எம். கே. தியாகராஜா பாகவதர், பி. யூ. சின்னப்பா போன்றோர் காலத்தில் கர்நாடக இசையை ஜனரஞ்சகமாக்கி திரைப்படப் பாடல்களில் இனிமையாக மக்களுக்குப் பிழிந்து கொடுத்தார்கள். அதிலே பாடியவர்களின் திறமையும் போற்றத்தக்கது. பின்பு கர்நாடக இசையை அடித்தளமாக வைத்து நவீன வாத்தியங்களைக் கையாண்டு இசையமைத்தார்கள். அத்துடன் இசையமைப்பிலே மேல் நாட்டு இசைகள், இந்தி மெட்டுக்களையும் சேர்த்துக் கொண்டார்கள். இதில் ஒரு சிலர் தமது திறமையால் வெற்றிகண்டார்கள். இப்போதும் சிலர் நல்ல பாட்டுக்களை இசையமைக்கிறார்கள். புதிய முயற்சிகளையும் செய்கிறார்கள். கருத்து மிக்க இனிமையான எளிய சொற்களில் அமைந்த நல்ல பாட்டு, இசையமைப்பாளரின் திறமை, பாடுபவரின் திறமை இப்படித் திறமைகள் திறமான முறையில் சேரும்போதுதான் நெஞ்சில் நிலைக்கும். பாட்டு பிறக்கிறது. நீங்கள் குறிப்பிட்டது போல் இப்போது பல இசைக் கருவிகளை அநாவசியமாகப் புகுத்துவதுடன், அவைகளுக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. இதனால் பாட்டின் நோக்கமே பாதிக்கப்படுகின்றது.

❋ மதுரை மணிஐயர் மேல்நாட்டு இசையொன்றினை ப, ம, க, ரி, ச, த, ப, ம என்று ஸ்வரப்படுத்தி பக்குவமாகப் பாடியிருக்கிறார். காருக்குறிச்சி அருணாசலம் அதனை அழகாக நாதஸ்வரத்தில் வாசித்திருக்கிறார். இப்போதும் பல நாதஸ்வரவித்துவான்களை இரசிகர்கள் அதனை வாசிக்கும்படி விரும்பிக் கேட்கிறார்கள். அது மேல் நாட்டு இசையானாலும் சங்கராபரண இராகமாக இருக்கிறதே.

☼ மேல்நாட்டு இசையில், 'மேஜர் ஸ்கேல்' என்று இருக்கிறது. 'மேஜர் ஸ்கேலில்' இசைக்கப்படும்

[22 ஆம் பக்கம் பார்க்க]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே வெட்டுக

# சிரித்திரன் சிக்கல் II

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | 17 | |
| | | | |

இங்கே வெட்டுக

இங்கே வெட்டுக

பங்குபற்றுபவரின் பெயர்: ....................................

முகவரி: ....................................

....................................

....................................

***வாசகர்களுக்கு ஒரு வரப்பிரசாதம்***

இங்கே வெட்டுக

**அறிவுறுத்தல்: (1) முடிவு திகதி 10. 02. 1993**

(2) மேற்காட்டப்பட்ட வெற்றிடமுள்ள சதுரங்களில் எண்களை இடுக. அச்சதுரங்களில் இடப்பட்ட எண்களின் கூட்டுத்தொகை கிடையாகக் கூட்டும் பொழுதும், நிலைக்குத்தாகக் கூட்டும் பொழுதும், மூலவிட்டமாகக் கூட்டும் பொழுதும் 54 ஆக இருத்தல் வேண்டும். ஒரு எண் ஒருதரம் மட்டுமே உபயோகிக்கப்படல் வேண்டும்.

(3) ஆசிரியரின் விடையுடன் ஒத்த, முதலாவதாக, இரண்டாவதாக, மூன்றாவதாகத் தெரியப்படும் விடைகளுக்கே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகள் வழங்கப்படும்.

(4) முதலாம் பரிசு — 250 ரூபா
இரண்டாம் பரிசு — 150 ரூபா
மூன்றாம் பரிசு — 100 ரூபா

**விதிகள்:**

(i) போட்டிப் பத்திரங்கள் முடிவுத் திகதிக்கு முன்போ அல்லது அன்றோ வந்து சேரத்தக்கதாக அனுப்பப்படல்வேண்டும். காலதாமதமாயின் நிராகரிக்கப்படும்,

(ii) போட்டிப் பத்திரங்கள் யாவும் சிரித்திரனில் பிரசுரிக்கப்பட்ட இதழிலேயே செய்யப்படல்வேண்டும். அவ்வாறில்லையேல் நிராகரிக்கப்படும்.

(iii) அனுப்ப வேண்டிய முகவரி:- சிரித்திரன்
550, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

**தபால் உறையின் இடது பக்கத்தின் மேல் மூலையில் "சிரித்திரன் சிக்கல் போட்டி II" எனக் குறிக்கப்படல் வேண்டும்.**

(iv) போட்டிப் பெறுபேறுகள் வெற்றிபெற்றவர்களுக்கு முடிவுத் திகதியிலிருந்து இரண்டு கிழமைக்குள் கடிதம் மூலம் தெரிவிக்கப்படும். அக் கடிதத்திலேயே பரிசில்கள் வழங்கும் திகதியும், நாளும் குறிக்கப்படும்.

(v) ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது, இது தொடர்பாக கடிதம் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ எதுவித தொடர்பும் அனுமதிக்கப்படமாட்டாது.

"வாசகர்களின் சிந்தனையைத் திட்டுவதே சிரித்திரனின் அபிலாஷை"

**சிரித்திரன் சிக்கலை விடுவிப்பவர்களுக்கான பரிசினை கரணவாய் முத்தவிநாயகர் கோவிலடி "பிள்ளையார் அரிசி ஆலை" ஸ்தாபனத்தினர் வழங்குவார்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரித்திரன் சிக்கல் - 1 இன் வெற்றிபெற்ற விடை

| | | | |
|---|---|---|---|
| 1 | 16 | 13 | 4 |
| 11 | 6 | 7 | 10 |
| 8 | 9 | 12 | 5 |
| 14 | 3 | 2 | 15 |

ஏராளமான விடைகள் வந்த போதிலும், ஆசிரியரின் விடைக்கு ஒத்ததாக ஒரேயொரு விடைதான் கிடைத்ததால் அவ்விடைக்கு மட்டுமே முதலாம் பரிசில் வழங்கப்பட்டுள்ளது. இரண்டாம், மூன்றாம் பரிசில்களுக்குப் பதிலாக ஐந்து ஐம்பது ரூபா ஆறுதல் பரிசில்கள் அதிர்ஷ்டத் தெரிவின் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

*முதலாம் பரிசு:-*

திருமதி ஜெயராணி மகேந்திரலிங்கம்
பழனி, டச்சு வீதி,
கோப்பாய் தெற்கு.

*ஆறுதல் பரிசில்கள் பெற்றவர்கள் வருமாறு:-*

(1) ப. த. சின்னராசா
654/4 வண்—கிழக்கு
தலையாளி,
யாழ்ப்பாணம்.

(2) கை. யோகாம்பிகை
''கல்வளவு'',
கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.

(3) இ. மகேந்திரன் (அருள்)
1191, திருநகர்,
கிளிநொச்சி.

(4) பாலசிங்கம் காண்டீபன்
கொத்தம்பியா குளம்,
பெட்டிக் கடை,
துணுக்காய்.

(5) செல்வி ம. மீனலோஜினி
C/o Dr இ. மயில்வாகனம்
பறாளாய் வீதி,
சுழிபுரம்.

இவர்களுக்கான பரிசுப் பணத்தினை பருத்தித் துறையைச் சேர்ந்த டாக்டர் M. K. முருகானந்தன் வழங்குகிறார்.

[20 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இசை சங்கராபரண இராகமே பேசும். கர்நாடக சங்கீதம் விசாலமானது. எல்லா இசையையும் உள்ளடக்கியது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இசை எல்லா மொழிகளையும் பேசும், அந்தஇசை ஞானம் இறைவன் அனுக்கிரகத்தால்தான் கிடைக்கும். இசையை வாசிப்பதில், பாடல்களுக்கு இசையமைப்பதில் சாந்தியும் மன நிறைவும் காண்கிறேன். அதுபோல தமிழ் மக்களின் சாந்தியும் சமாதானமுமான வாழ்விற்காகவும் இப்பணியைத் தொடர்ந்து செய்வேன்.

— சந்திப்பு:- ராகமாலிகை


பவானி கச்சான் அலுவா

கல்யாணத் தரகர்: நான் மாப்பிள்ளையை வெண்டுதாறன். நாலு பைக்கற் பவானி கச்சான் அலுவா வாங்கி வையுங்கோ. மச்சானுக்கு பவானி கச்சான் அலுவா எண்டா கொள்ளை ஆசை.

★ பவானி ★
கச்சான் அலுவா
யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ அன்று கமரா இருந்திருந்தால் துஷ்யந்தன் சகுந்தலையை
திரையில் தீட்டியிருக்க மாட்டான்.

# சண்கோ

## படப்பிடிப்பாளர்கள்

டச்சு வீதி, ★ உடுவில்.



கணவன்: ஆதவன் மில்லில் அரைத்த
மாவில்தான் நத்தார் பல
காரம் செய்ய வேணும்.

# ஆதவன் மில்ஸ்

(கிறைண்டிங் மில்)

கொடிகாமம் வீதி - புலோலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★★★★★★★★★★★★

# பின் சிரிப்பு

★★★★★★★★★★★★

குயில்:- உன்னுடைய சாரீரத்தை மனிதர் விரும்பிக் கேட்பதில்லை. என்னுடைய சாரீரத்தை விரும்பிக் கேட்கிறார்கள்.

சேவல்:- ஓம்,என்னுடைய சாரீரத்தை விரும்பாயினம் என் சரீரத்தை விரும்பிச் சுவைப்பினம்.

ஒருவர்:- சுப்பர் சோனிக் வந்தாலென்ன; அப்பர் வந்தாலென்ன; இந்தக் கட்டை கிறுங்காது.

மற்றவர்:- வழக்கமா துடை நடுங்கிற நீ இண்டைக்கென்ன துள்ளுறாய்.

ஒருவர்:- இல்லையண்ணை ...ஒரு இங்கிலீஷ் பைற்றிங்படம் பாத்திட்டு வாறன்.

... அதிமதுரம்

ஒருவர்:- என்ன தீபாவளி நாளயிலயும் ஹெலிகொப்டர் நோட்டீஸ் போடுது...

மற்றவர்:- தீபாவளி வாழ்த்துப் பத்திரம் போல...

சிறுவன்:- அப்பா! இந்தப்பத்து பலூனையும் ஊதித்தாங்கோ... கிறிஸ்மஸ்சுக்குக் கட்டுறதுக்கு.

தந்தை:- போடா... இத ஊதினா நான்வயிறு வெடிச்சுச் செத்துப் போவன்.

சிறுவன்:- அப்ப என்னெண்டு ஊதி மோட்டச் சைக்கிள் ஸ்ராட் பண்ணுறீங்கள்.

ஒருவர்:- நான் ஒரு வழியில நெப்போலியனுக்குச் சொந்தக்காறன்.

மற்றவர்:- என்ன பேய்க்கதை கதைக்கிறாய்

ஒருவர்:- என்ர மகன் பிரான்சில நெப்போலியன் வழிவந்த பொம்பிளயத்தான் கலியாணம் கட்டியிருக்கிறான்.

— நன்றி......''மாற்றம்''

மணிப்புறா:- மனிதன் உயர்திணை; நாங்கள் அஃறிணை,நாங்கள் விவாகரத்துச் செய்வதில்லை.மனிதனுக்குள் விவாகரத்து மலிந்து கொண்டு போகிறது.

*இந்த இதழ் விரிப்பு*

வடக்கில் யுத்தம் நடைபெறவில்லை

— சிறீலங்காப் பிரதமர்
டி. பி. விஜேதுங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தை:- மகனுக்கு கனடாவுக்கு குடுத்து விடுற
பலகாரத்தை ஸ்ரீகிருஸ்ணாஸ் கிறைன்
டிங் மில்லில அரைச்ச மாவிலதான்
செய்யவேணும்.

# ஸ்ரீ கிருஸ்ணாஸ்

## கிறைன்டிங் மில்

பதிவு இலக்கம்: 12656

பிரதான வீதி -- சிறுப்பிட்டி.

உரிமையாளர்: ஸ்ரீ. ஸ்ரீவிஜயகுமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ ஆசிரியர்: தானத்தில் சிறந்த தானம் எது?

மாணவன்: அன்னதானம் அதுவும் விநாயகர் அரிசி ஆலையில் குத்திய அரிசியில் குடுக்க வேணும்.



# விநாயகர்

# அரிசி ஆலை

## விநாயகர் தரும நிதியம்.

கடற்கரை வீதி - பருத்தித்துறை.

காப்பாளர்: ஆ. சி. முருகுப்பிள்ளை

மாறன் பதிப்பகம் 664, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org